**மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்**
முன்னிலை - திரு ஆ.மணிமொழி, பி.எ, எல் எல்.பி.,
அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்

2017 - ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23-ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹேவிளம்பி வருடம் ஆனி திங்கள் 9-ம் நாள்

**அமர்வு வழக்கு எண்.274/2015**

(கோவை, கூடுதல் மகளிர் நீதிமன்றம், நீதித்துறை நடுவர் நீதிமன்ற முன்னுரிமை பதிவு வழக்கு எண்.06/2015)
கோவை மத்திய பகுதி அனைத்து மகளிர் காவல் நிலையம் குற்ற எண்.03/2014

WEB COPY

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், மத்திய பகுதி, கோயம்புத்தூர். |
| 2. | எதிரியின் பெயர் | : | டோனிசேபர்ஸ்(32/2015)<br>த/பெ. சந்திரமோகன்,<br>க.எண்.68/83,சாந்திநிலையம், பிங்கர் போஸ்ட்,ஊட்டி. |
| 3. | குற்றச்சாட்டு | : | பிரிவுகள் 376 மற்றும் 506 (i) இதசவின் கீழ் |
| 4. | எதிரியின் பதில் | : | பிரிவுகள் 376 மற்றும் 506 (i) இதசவின் கீழ் குற்றவாளி இல்லை |
| 5. | நீதிபதியின் முடிவு | : | பிரிவுகள் 376 மற்றும் 506 (i) இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப் பட்டது. |
| 6. | தீர்ப்பு | : | முடிவாக எதிரி மீதான பிரிவுகள் 376 மற்றும் 506(i) இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் எந்தவொருதகுநிலை ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை அவர் மீதான குற்றச்சாட்டுக்களிலிருந்து பிரிவு 235(1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | | இவ்வழக்கில் பி.ஆர்.எண்.67/2015 -ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 லேப்டாப் மற்றும் சா.பொ.2 லேப்டாப் சார்ஜர் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின், அதன் உரிமையாளரான எதிரி டோனிசோபர்ஸ் இடம் ஒப்படைக்கவும் அல்லது மேல் முறையீடு இருப்பின் மேல்முறையீட்டில் ஏற்படும் முடிவிற்கேற்ப செயல்படவும் உத்திரவிடப்படுகிறது. |
| | | | |

WEB COPY

இந்த வழக்கானது 12.06.2017 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் அரசு தரப்பில் திருமதி ஆர் சரோஜினி, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம்.மகேஸ்வரன், அவர்கள் ஆஜராகியும் நடத்திய இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீர்ப்புரை

### அரசு தரப்பு வழக்கு -

1. சாட்சி பிரபாகர் மகளான புகார்தாரர் XXXXXXX ( பாதிக்கப்பட்ட பெண் ) என்பவர் தன் சொந்த ஊரான ஊட்டியில் பள்ளியில் படித்து வந்த போது 2007 ம் ஆண்டு CSC கம்பியூட்டர் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கு சென்றார். எதிரி டோனிசேபர்ஸ் அங்கு கம்பியூட்டர் பயிற்சி கற்று கொடுக்கும் ஆசிரியராக பணிபுரிந்தார். இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. 2008 ம் ஆண்டு புகார்தாரர் கோவை இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் பி.இ. படிப்பில் சேர்ந்தார். கல்லூரி விடுதியில் தங்கி அவர் படித்து வந்த போது, 2011 ம் வருடம் ஒரு நாள் எதிரி தன் பெற்றோர் கோவைக்கு வந்து ராமகிருஷ்ணா மருத்துவமனை எதிரில் உள்ள பாரஸ்ட் டிரான்சிட் லாட்ஜில் தங்கியுள்ளதாகவும்,

அவர்களை பார்க்க வருமாறும் புகார்தாரரை அழைத்தார். புகார்தாரரும் மேற்படி லாட்ஜிற்கு சென்ற போது அங்கு எதிரி மட்டும் இருந்துள்ளார். இது பற்றி விசாரித்த போது எதிரி தன் பெற்றோர் வெளியில் சென்றுள்ளதாகவும், சிறிது நேரத்தில் வந்துவிடுவார்கள் என்றும் கூறி புகார்தாரரை நம்ப வைத்துள்ளார். மேலும் புகார்தாரருக்கு எதிரி மிட்டாய் ஒன்றை கொடுத்து சாப்பிட வைத்து மயக்கமடையச் செய்துள்ளார். சிறிது நேரம் கழித்து புகார்தாரர் மயக்கம் தெளிந்து எதிரியிடம் நடந்தது பற்றி கேட்ட போது எதிரி புகார்தாரரை செல்போனில் தவறான கோணத்தில் படம் பிடித்ததாக கூறி செல்போனில் படங்களை காட்டினார். மேலும் தான் சொல்வது போல நடக்க வேண்டும் என்றும் இல்லையெனில் அந்த படங்களை இன்டர்நெட்டில் வெளியிடுவேன் என்றும் புகார்தாரரை கொலை செய்துவிடுவேன் என்றும் மிரட்டி கட்டாயப்படுத்தி புகார்தாரருடன் உடலுறவு கொண்டு கற்பழித்துள்ளார். அதனை தொடர்ந்து பலமுறை எதிரி மேற்சொன்னபடி புகார்தாரரை மிரட்டி உடலுறவு கொண்டுள்ளார். மேலும் புகார்தாரர் 2013 ம் ஆண்டு அதே கல்லூரியில் எம்.இ. படிப்பில் சேர்ந்து கல்லூரி விடுதியில் தங்கி படித்து வந்த போது, எதிரி புகார்தாரரை மிரட்டி 9.10.2013 ம் தேதியன்று சென்னைக்கு அழைத்துச் சென்று ராயபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு திருமணம் செய்துகொண்டுள்ளார். எனவே புகார்தாரர் 20.1.2014 ம் தேதியன்று கொடுத்த எழுத்துமூலமான புகாரின் பேரில் வழக்கு பதிவுசெய்து புலன் விசாரணை மேற்கொண்டு பின்னர் எதிரிமீது பிரிவுகள் 376, 506(i) இதசவின்கீழ், கோவை மத்திய பகுதி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை 18.06.2015 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

2. இந்த வழக்கானது கோயம்புத்தூர், கூடுதல் மகளிர் நீதிமன்றம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முன்னுரிமை பதிவு வழக்கு எண்.06/2015 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு கு.வி.மு.ச.207 ஆவது பிரிவின் கீழ் குற்றப்பத்திரிகையில் உள்ள நகல்கள் வழங்கப்பட்டு, இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத் தக்க வழக்கு என்பதால் கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக கு.வி.மு.ச. 209 பிரிவின் கீழ் அனுப்பப்பட்டு மேற்படி கோவை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்ட பின்பு மேற்கொண்டு கோவை முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் பேரில் விசாரணைக்காக இந்நிதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன், பிரிவு 226 குவிமுச-வின்படி, அரசு தரப்பில் ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும்

வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனையப் போதுமான ஆதாரங்கள் உள்ளனவாக இந்நீதிமன்றத்திற்குத் தோன்றியமையால் எதிரி மீது பிரிவுகள் 376 மற்றும் 506 (i) இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு எடுத்துக் கூறி வினவியபோது எதிரி அவர் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

3. இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிருபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் சாட்சிகள் பட்டியலில் 22 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு அவர்களில் 13 சாட்சிகள் அ.சா 1 முதல் 13 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் 21 வரையான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1, சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எ.சா.ஆ,1 முதல் எ.சா.ஆ.3 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரி தரப்பில் சான்றுப்பொருள்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

WEB COPY

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறியவரும் அரசு தரப்பு வழக்கானது:-</u>**

4. அசா.2 பிரபாகர், அசா.3 பிரபாவதியின் கணவர். அவர்களின் மகள் அசா.1 xxxxxxxx( பாதிக்கப்பட்ட பெண் - புகார்தாரர் ) ஆவார். அவர்கள் ஊட்டியில் குடியிருக்கிறார்கள். அசா.5 திரு பாலகுமார் ஊட்டியில் CSC கம்பியூட்டர் சென்டர் நடத்தி வருகிறார். அசா.1. 2007 ம் ஆண்டில் கணினி பயிற்சிக்காக ஊட்டியில் உள்ள அசா.5 ன் CSC கணினி பயிற்சி மையத்திற்கு சென்ற போது அங்கு எதிரி டோனிசேபர்ஸ் கணினி பயிற்றுவிக்கும் ஆசிரியராக பணிபுரிந்தார். இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அசா.1 படிப்பு சம்மந்தமான சந்தேகங்களை எதிரியிடம் கேட்பார். 2008 ம் ஆண்டு கோவை இந்துஸ்தான் கல்லூரியில் அசா.1 பி.இ. படிப்பதற்காக சேர்ந்தார். அந்த சமயத்திலும் சந்தேகங்கள் ஏற்பட்டாலும் அசைன்மெண்ட் கொடுக்கப்பட்டாலும் அது குறித்து விள்க்கங்களை அசா.1 எதிரியிடம் கேட்டு தெரிந்துகொள்வார். பி.இ. இறுதியாண்டு படித்த போது 2012 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நாள் எதிரி அசா.1- இடம் தன் பெற்றோர் கோவைக்கு வந்திருப்பதாகவும், அவர்களை வந்து ஒரு முறை பார்த்து செல்லும்படியும் கேட்டுக்கொண்டார். அசா.1 ம் அதற்கு சம்மதித்து உக்கடத்திலிருந்து எதிரியுடன் ஆட்டோவில் ராமகிருஷ்ணா திருமணமண்டபம் அருகில் சென்றார். அங்கு பாரஸ்ட் டிரான்சிட் லாட்ஜில் அவருடைய பெற்றோர்கள் இருப்பதாக கூறி அந்த லாட்ஜில் உள்ள

ஒரு அறைக்கு அசா.1 ஐ எதிரி அழைத்துச்சென்றார். அந்த அறைக்குள் யாரும் இல்லை. எதிரி அவர் பெற்றோர் அருகில் உள்ள கல்யாணமண்டபத்திற்கு சென்றுள்ளதாகவும் ஐந்து நிமிடத்தில் வந்துவிடுவார்கள் என்றும் கூறினார். எதிரி அசா.1-க்கு சாப்பிட சாக்லெட் கொடுத்தார். அதை சாப்பிட்டவுடன் அசா.1 க்கு கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் வந்தது. சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்த போது எதிரி அசா.1 ஐ நிர்வாணமாக பல கோணங்களில் செல்போனில் போட்டோ எடுத்து அவற்றை அசா.1-இடம் காண்பித்து, எதிரி சொல்லும்படி அசா.1 நடக்காவிட்டால் அந்தபோட்டோக்களை இன்டர்நெட்டில் போட்டுவிடுவதாகவும், அசா.1-ஐ கொலை செய்துவிடுவதாகவும் மிரட்டினார். பின்பு எதிரி ஒரு மாத்திரையை அசா.1 க்கு கொடுத்து அதை கட்டாயமாக சாப்பிட வேண்டும் என்று சொல்லி வற்புறுத்தினார். அதை சாப்பிட்டவுடன் அசா.1 எதுவும் செய்யமுடியாமல், ஆனால் நினைவுடன் இருந்தார். எதிரி அசா.1 ன் ஆடைகளை கலைத்து விட்டு மார்புகளை கசக்கி, உதடுகளை கடித்தார். பின்பு எதிரி அசா.1-ஐ கீழே தள்ளி அவருடைய ஆண் உறுப்பை எடுத்து அசா.1 ன் பெண் உறுப்பில் வைத்து பாலியல் பலாத்காரம்செய்தார்.அதனால் அசா.1 ன் பெண் உறுப்பில் ரத்தம் வந்தது. அசா.1 தன்வாழ்க்கையை எதிரி பாழாக்கிவிட்டதாக கூறி அழுதார். எதிரி அசா.1-ஐ மிரட்டினார். அதற்கு பின்னிட்டும் எதிரி அசா.1-ஐ பலமுறை மேற்படி லாட்ஜிற்கு அழைத்துச் சென்று உடலுறவு கொண்டார். அசா.1 ன் பிராஜக்ட் செய்ய அசா.1 ன் கல்வி சான்றிதழ்கள் தேவைப்படுவதாக கூறி எதிரி அசா.1 ன் சான்றிதழ்களை பறித்துவைத்துக்கொண்டார். மேலும் மேற்படி லாட்ஜில் அசா.1 உடன் எதிரி அந்தரங்கமாக இருந்ததை ஆபாசபடமாக எடுத்துள்ளார். அசா.1-க்கு திருமணம் செய்ய அவர் வீட்டில் மாப்பிள்ளை பார்த்தார்கள். அதனால் 8.10.2013 ம் தேதியன்று எதிரியிடம் அசா.1 தன் கல்வி சான்றிதழ்களையும், மேற்படி ஆபாசபடங்களையும் கொடுத்துவிடும்படி கேட்டார். எதிரி தன்னுடன் ஒருமுறை மட்டும் சென்னையில் உள்ள தன் அக்கா வீட்டிற்கு வரும்படியும் அங்கு வைத்து அனைத்தையும் திருப்பி கொடுத்துவிடுவதாகவும் கூறினார். அதனால் அன்று இரவு அரசு பேரூந்தில் அசா.1 எதிரியுடன் சென்னைக்கு சென்றார். மறுநாள் 09.10.2013 ம்தேதியன்று எதிரி சென்னையில் அவருடைய அக்கா மற்றும் அக்கா கணவர் மற்றும் அவருடைய நண்பர்கள் ஆகியோரை வைத்து அசா.1-ஐ மிரட்டி ராயபுரம் சார் பதிவாளர் அலுவலகம் அழைத்து சென்று சில பேப்பர்களில் கையெழுத்து வாங்கினார். அதற்கான காரணம் எதையும் எதிரி சொல்லவில்லை. பின்னீட்டு அசா.1 க்கும், எதிரிக்கும் பதிவு திருமணம் நடந்ததாகவும், இனி எதுவும் செய்ய முடியாது என்றும் எதிரி கூறினார். அன்று இரவு சென்னையிலிருந்து கிளம்பி அடுத்த நாள் அசா.1-ஐ எதிரி கல்லூரிக்கு கொண்டு வந்து விட்டுவிட்டார். பிறகு கல்லூரிவிடுதியிலிருந்து அசா.1 தன் தாயாரான அசா.3 க்கு போன்

WEB COPY

செய்து நடந்ததை எல்லாம் சொல்லி தன்னை வந்து வீட்டிற்கு அழைத்து செல்லும்படி கேட்டுக்கொண்டார்.14.12.2013 ம் தேதியன்று அசா.2 மற்றும் அசா.3 கோவை வந்து அசா.1-ஐ கல்லூரி விடுதியிலிருந்து அழைத்து சென்றார்கள். 19.12.2013 ம் தேதியன்று அசா.-1 க்கு ஒரு தேர்வு இருந்ததால் மீண்டும் கோவைக்கு வந்தார். அப்போது எதிரி அசா.1 ன் மீது செட்டிபாளையம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார். போலீசார் விசாரணைக்காக அழைத்து விசாரித்த போது எதிரி அசா.1-ஐ தன் மனைவி என்று கூறினார். அசா.1 அதை மறுத்தார். எனவே நீதிமன்றம் மூலம் தீர்வு காணும்படி போலீசார் எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள். பிறகு எதிரியும், அசா.1 ம் திருமணம் செய்துகொண்டது போல படங்களை எதிரி மின் அஞ்சல், மற்றும் இன்டர்நெட் போன்றவற்றில் வெளியிட்டார். அசா.1 ன் மின் அஞ்சலை எதிரி முடக்கம் செய்தார். அதனால் மேற்கொண்டு எதிரி ஏதாவது செய்துவிடுவார் என்று பயந்து அசா.1 கோவை மத்திய பகுதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 20.01.2014 ம் தேதியன்று எதிரிமீது அதசாஆ.1 புகார் கொடுத்தார். பிறகு போலீசார் அசா.1-ஐ விசாரித்த போது எதிரி அசா.1-ன் ஆபாச படத்தை பதிவு செய்துவைத்திருந்த எதிரியின் மடி கணினி, எதிரி அசா.1- இடம் கொடுத்து வைத்திருந்ததால் அதனை போலீசாரிடம் அசா.1 ஒப்படைத்தார். அந்த மடி கணினி சா.பொ.1 ஆகும். அதன் சார்ஜர் சா.பொ.2 ஆகும். மடி கணினியில் இருந்த ஆபாச படத்தை எதிரி அழித்துவிட்டார். அசா.1-ஐ போலீசார் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பிவைத்தார்கள். நீதித்துறை நடுவர் அவர்கள் முன்னிலையில் அசா.1 வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலம் அதசாஆ.2 ஆகும்.

WEB COPY

5. அசா.11 திருமதி ராணி உதவி ஆய்வாளராக கோவை மத்திய பகுதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 20.01.2014 ம் தேதியன்று இரவு 8.00 மணிக்கு பணிபுரிந்த போது அசா.1 நிலையம் வந்து கொடுத்த புகாரை பெற்று அதசாஆ.17 முதல் தகவல் அறிக்கை தயாரித்து அவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார்.

6. அசா.13 திருமதி ராஜேஸ்வரி கோவை மத்திய பகுதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக 20.01.2014 ம் தேதியன்று பணிபுரிந்த போது, அசா.11 அனுப்பிவைத்த முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் நகல்களை பெற்றுக்கொண்டு, அன்று இரவே நிலையத்தில் ஆஜரில் இருந்த அசா.1-ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் ஆஜர் செய்த சா.பொ.1 லேப்டாப்-ஐ அதசாஆ.19 படிவம் 95 மூலம் இரவு 9.00 மணிக்கு கைப்பற்றினார். அன்று இரவு 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று அசா.4

மேத்யூ மற்றும் சாட்சி ஜெயபிரகாஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு அதசாஆ.8 பார்வை மகசர் மற்றும் அதசாஆ.20 மாதிரிவரைபடம் தயாரித்தார்.

7. மேலும் அசா.4, தான் நடத்தி வரும் பாரஸ்ட் டிரான்சிட் ஓட்டலில் எதிரி ஒரு பெண்ணுடன் 01.06.2012, 14.04.2012, 15.09.2012 மற்றும் 27.07.2013 ஆகிய தேதிகளில் அறை எடுத்து தங்கியது சம்மந்தமான விருந்தினர் வருகை பதிவேடு புகைபட நகல்கள் அதசாஆ.3 முதல் அதசாஆ.6 வரை உள்ளவற்றை ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அதனை அசா.13 ஆய்வாளர் கைப்பற்றி அதசாஆ.7 கைப்பற்றுதல் மகசர் தயாரித்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். மேற்படி சாட்சிகளையும் மேலும் பிரபாகர், பிரபாவதி ஆகியோரையும் அன்றைய தினமே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அசா.1-ஐ மருத்துவ பரிசோதனைக்கு அனுப்ப அதசாஆ.21 வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார்.

WEB COPY

8. அசா.8 மருத்துவர் சுமித்ரா கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 23.01.2014 ம் தேதியன்று மாலை 5.00 மணியளவில் அசா.1-ஐ மருத்துவ பரிசோதனை செய்து அதசாஆ.12 விபத்து பதிவேட்டு நகல் வழங்கினார். அசா.1-ன் உடலிலும், மார்பகங்களிலும், பிறப்பு உறுப்பிலும் வெளிக்காயங்களோ அல்லது உட்காயங்களோ காணப்படவில்லை என்றும் அவர் கன்னித்திரை கிழிந்திருந்தது என்றும் சிறுநீர் பரிசோதனை செய்ததில் அவர் கர்ப்பமாக இல்லை என்று தெரிய வந்தது என்றும் அவரது பிறப்பு உறுப்பு திரவம் சேகரித்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது என்றும் அந்த விபத்து பதிவேட்டு நகலில் அசா.8 குறிப்பிட்டுள்ளார்.

9. அசா.9 திரு வெங்கடேஸ்வரன் அறிவியல் அலுவலர், கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் 24.01.2014 ம் தேதியன்று, அசா.8 சேகரித்து அனுப்பிய அசா.1-ன் பிறப்பு உறுப்பு திரவம் தேய்க்கப்பட்ட இரண்டு கண்ணாடி வில்லைகளை பெற்று ஆய்வு செய்தார். அவற்றில் விந்து அணுக்கள் ஏதும் காணப்படவில்லை. இது சம்மந்தமான அதசாஆ.13 இரசாயன பரிசோதனை அறிக்கையினை அசா.8 க்கு அனுப்பிவைத்தார்.

10. அசா.13 ஆய்வாளர், சா.பொ.1 லேப்டாப்பை ஆய்வு செய்ய நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தார். 25.01.2014 ம் தேதியன்று சாட்சிகள் பாலகுமார், மெகபூப்செரிப், பிரான்சிஸ், செல்வராணி ஆகியோரையும், பெண் தலைமை காவலர் கவிதா என்பவரையும், விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரி சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. நீதிமன்ற உத்திரவுப்படி 13.03.2014 ம் தேதியன்று நிலையம் ஆஜரான எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்.

11. அசா.13-ன் வேண்டுகோள் கடிதம் அடிப்படையில் அசா.12 திரு சுப்பையா, நீதித்துறை நடுவர் எண்.4, கோவை அவர்கள் 12.02.2014 ம் தேதியன்று அசா.1-ன் வாக்குமூலத்தை பிரிவு 164 குவிமுசவின் கீழ் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். அசா.1-ன் வாக்குமூலம் அடங்கிய கோப்பு அதசாஆ.18.

WEB COPY

12. நீதிமன்ற உத்திரவுப்படி 13.03.2014 ம் தேதியன்று நிலையம் ஆஜரான எதிரியை அசா.13, அதசாஆ.9 நீதிமன்ற வேண்டுகோள் கடிதம் மூலம், மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். அசா.6 மருத்துவர் ஜெயசிங், கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 14.03.2014 ம் தேதியன்று டோனிசேபர்ஸ் (எதிரி) என்ற ஆண் நபரை ஆண்மை தன்மை குறித்து மருத்துவ பரிசோதனை செய்து, மேற்படிநபர் ஆண்மைதன்மையற்றவர் என்பதற்கான தடயங்கள் இல்லை என்று கருத்து கூறி ஆண்மைதன்மை பரிசோதனை சான்றிதழ் அதசாஆ.10 வழங்கினார்.

13. அசா.7 திரு. திருச்செல்வம், சார்பதிவாளர் சென்னை ராயபுரம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த போது 26.03.2014 ம் தேதியன்று, அசா.13 ன் வேண்டுகோளுக்கிணங்க, எதிரி மற்றும் அசா.1 மேற்படி அலுவலகத்தில் 09.10.2013 ம் தேதியன்று அவர்களுக்கிடையே நடைபெற்ற திருமணத்தை பதிவு செய்ததற்கான பதிவேட்டின் திருமண பதிவு கணினி நகல் அதசாஆ.11 ஆவணத்தை வழங்கினார். மேற்படி திருமண பதிவு ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்த எபிநேசர் மற்றும் திருமணத்தை பதிவுசெய்த அசா.7 ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை அசா.13 பதிவு செய்தார்.

14. அசா.10 திருமதி தேவகி, உதவி இயக்குனர், கணினி தடயவியல் பிரிவு, சென்னை தடய அறிவியல் துறை அவர்கள், கோவை கூடுதல் மகளிர் நீதிமன்றத்திலிருந்து வேண்டுகோள் கடிதம் அதசாஆ.14 மூலம், மூடி முத்திரையிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட சா.பொ.1 லேப்டாப்பை, 15.04.2014ம் தேதியன்று ஆய்வு செய்து, இணைப்புகள் 1 முதல் 5 அடங்கிய அறிக்கை அதசாஆ.15-ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார்.

15.அசா.13 ஆய்வாளர், தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவர்களையும், தடய அறிவியல் துறை அலுவலர்களையும், விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். செட்டிபாளையம் காவல் நிலையத்தில் எதிரி வாதி மீது இதற்கு முன்பு கொடுத்திருந்த புகார் பற்றி விசாரித்த உதவி ஆய்வாளர் ஜான்ரோஸ் மற்றும் இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ராணி ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். சான்று பொருட்களை ஆய்விற்கு எடுத்துச்சென்ற காவலர்களையும், மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்ற காவலர்களையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து எதிரிமீது 18.06.2015ம் தேதியன்று பிரிவு 376 மற்றும் 506(i) இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

WEB COPY

16.இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

17. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி எதிரிக்கு எடுத்துக் கூறி கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் என மறுத்தார். எதிரி எழுத்துமூலமான விளக்கம் தாக்கல் செய்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு எனக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிரி தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று பிறகு மேற்குறிப்பு செய்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

**<u>பிரச்சினை:</u>**

18. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்னை யாதெனில், எதிரி மீதான, பிரிவுகள் 376 மற்றும் 506 (i) இதச-ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் எந்தவொரு தகுநிலை ஐயப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

19. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 13 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் 21 வரையான சான்றாவணங்கள், சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. எதிரி தரப்பில் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 குறியீடு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. எதிரி, 2011 ம் வருடம் ஒரு நாள் அசா.1-ஐ கோவை ராமகிருஷ்ணா மருத்துவமனை எதிரில் உள்ள பாரஸ்ட் டிரான்சிட் லாட்ஜ்-க்கு அழைத்துச்சென்று அங்கு ஒரு அறையில் வைத்து மிட்டாய் ஒன்று கொடுத்து சாப்பிட வைத்து மயக்கமடைய செய்து அசா.1-ஐ செல்போனில் தவறான கோணங்களில் புகைப்படங்கள் எடுத்து, பின்பு அதனை அவரிடம் காட்டி, தான் சொல்லுவது போல நடக்க வேண்டும் என்றும் இல்லையெனில் அந்த படங்களை இன்டர்நெட்டில் வெளியிடுவேன் என்றும் கொலை செய்துவிடுவேன் என்றும் மிரட்டி, பிறகு அசா.1-இடம் ஒரு மாத்திரையை கொடுத்து சாப்பிட சொல்லி கட்டாயப்படுத்தி, அந்த மாத்திரையை சாப்பிட வைத்து, எதிரி அசா.1-உடன் அவர் விருப்பத்திற்கு மாறாக உடலுறவு கொண்டு கற்பழித்தார் என்றும் அதனை தொடர்ந்து எதிரி பலமுறை அசா.1-ஐ மிரட்டி அதே லாட்ஜில் உடலுறவு கொண்டார் என்றும் மேலும் அசா.1-ஐ மிரட்டி சென்னை அழைத்துச் சென்று 09.10.2013 ம் தேதியன்று ராயபுரம், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு திருமணம் செய்து கொண்டார் என்றும், அரசு தரப்பில் எதிரிமீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

WEB COPY

**<u>இருதரப்பு வாதுரைகள்-</u>**

20. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலமாக எதிரிமீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரியை குற்றவாளி என்று தீர்மானித்து தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

21. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர், எதிரியும், அசா.1 ம் ஒருவரையொருவர் விரும்பி பல ஆண்டுகள் காதலித்து வந்தார்கள் என்றும், அசா.1-ன் முழு சம்மதம் மற்றும் விருப்பத்தின் பேரில் எதிரி அசா.1-ஐ திருமணம் செய்து கொண்டு அந்த திருமணத்தை பதிவு செய்தார் என்றும் அசா.1-ன் முழு சம்மதத்தின் பேரில் தான் திருமணத்திற்கு பிறகு இருவருக்கும் இடையில் உடலுறவு ஏற்பட்டது என்றும் புகாரில் கூறியுள்ளதுபோல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அதனால் தான் புகார் இரண்டு ஆண்டுகள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அசா.1-ஐ எதிரியிடமிருந்து அசா.1-ன் பெற்றோர் கட்டாயப்படுத்தி பிரித்து அழைத்து சென்றுவிட்டார்கள் என்றும் அதனால் இந்த புகாருக்கு முன்பே எதிரி உதகமண்டலம் சார்பு நீதிமன்றத்தில் அசா.1-ஐ தன்னுடன் சேர்ந்து வாழ அழைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதன் பின்பு அசா.1 விவாகரத்துகோரி அதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றும் மேலும் எதிரி செட்டிபாளையம் காவல் நிலையத்தில் இந்த புகாருக்கு முன்பே சேர்ந்து வாழ அழைத்து அசா.1 மீது புகார் கொடுத்து காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றும் அசா.1ன் பெற்றோர் இந்த திருமணத்தில் விருப்பம் இல்லாததால் அசா.1-ஐ தூண்டி கட்டாயப்படுத்தி எதிரியிடமிருந்து அசா.1-ஐ பிரித்து, அசா.1-க்கு வேறு ஒரு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும் லாட்ஜ் ஆவணங்கள், மருத்துவ ஆவணம், தடய அறிவியல் அறிக்கை ஆகியவை அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லை என்றும் அசா.1 புகாரிலும், சாட்சியத்திலும், நீதித்துறை நடுவரிடம் அளித்த வாக்குமூலத்திலும், முரண்பட்ட விவரங்களை தெரிவித்துள்ளார் என்றும் அசா.1-ன் ஆபாசமான புகைப்படங்கள் அல்லது வீடியோ கைப்பற்றப்படவில்லை என்றும் அசா.1 எதிரியை காதலித்து திருமணம் செய்து கொண்டு சந்தோசமாக இருந்ததை அவர் பெற்றோருக்கு எதசாஆ.3 கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் என்றும் எதிரி புகாரில் கூறப்பட்டது போல எந்த குற்றமும் செய்யவில்லை என்றும் எதிரிமீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

WEB COPY

22. மேலும் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்திதற்கு ஆதரவாக கீழ்கண்ட முன்மொழி தீர்வுகளை மேற்கோள் காட்டினார்.

1) (2004 (I) T.N.L.R.556 (SC)

SUPREME COURT

Moijullah @ Puttan etc. …. Appellants

versus

State of Rajasthan ….. Respondent

Indian penal Code, 1860- Sections 376, and 376/120-B- Rape- Acquittal of two accused – Sex scandal by luring girls, sexually exploiting them by taking their photographs in obscene poses – No evidence produced that these photographs recovered from these two accused were for blackmailing- No obscene photographs recovered from their labs-Held, High Court was justified in acquitting these two accused-No interference called for.

(2014 (1)T.N.L.R.261 (MAD)

2) MADRAS HIGH COURT

HAMSAVENI ...Petitioner

Versus

The Inspector of Police ...RESPONDENTS
and Others

As far as the age factor to be found out in this case with that of P.W.1 is concerned she was aged above 20 years and the first accused was 23 years at the time of occurance. There is no materials on the side of the prosecution to prove that P.W.1 was below the age of 16 years. Since she has aged above16 years and the same has been admitted byher, she had sufficient intelligence to

WEB COPY

understand the sugnificance and consequence of the act for which she was consenting to. At the time of examination of P.W.1 before the Court on 16.11.2005 she was aged 22 years. The first occurance occurred on 10.11.2003 as per her evidence. Hence, on the date of occurance she was 20 years. On this score, no offence is made out on the side of the accused.

3) AIR 2007 SUPREME COURT 155

Ramdas & Ors. V. State of Maharashtra.

It is no doubt true that mere delay in lodging the first information report is not necessarily fatal to the case of the prosecution. However, the fact that the report was lodged belatedly is a relevant fact of which the Court must take notice.

WEB COPY

**அசா.1 ( பாதிக்கப்பட்ட பெண்) ஒப்புக்கொண்டுள்ள பொருண்மைகள்**

**23.**அசா.1 ம், எதிரியும் ஊட்டியில் வசிக்கிறார்கள். அசா.1-ன் வீட்டிலிருந்து எதிரியின் வீடு சுமார் 3 அல்லது 4 கி.மீ தூரம். அசா.1 ஊட்டியில் கணினி பயிற்சிக்காக CSC கம்பியூட்டர் சென்டர் சென்ற போது அங்கு ஆசிரியராக இருந்த எதிரியுடன் பழக்கம் ஏற்பட்டு, 2007 ம் ஆண்டு முதல் இருவரும் பழகி வருகிறார்கள். இரு குடும்பத்தாருக்கும் அறிமுகம் உள்ளது. அசா.1 எதிரியின் வீட்டிற்கும், எதிரி அசா.1 ன் வீட்டிற்கும் பலமுறை சென்று வந்துள்ளார்கள். அசா.1 கோவையில் பொறியியல் கல்லூரியில் விடுதியில் தங்கி படித்த போது அவரை விடுதியில் சந்திக்க, மாமா என்ற முறையில் எதிரிக்கு பார்வையாளர் அடையாள அட்டை எதசாஆ.1 அசா.1-ன் கையெழுத்துடன் வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியில் படித்த போது அசா.1, எதிரியுடன் பல சமயங்களில் வெளியில் சென்று வந்துள்ளார். எதிரியுடன் சினிமா தியேட்டருக்கும் சென்று வந்துள்ளார். இருவரும் அடிக்கடி செல்போனில் பேசி வந்துள்ளார்கள். பள்ளி, கணினி பயிற்சி நிலையம் மற்றும் கல்லூரியில் படித்த போது அசா.1, படிப்பு சம்மந்தமான சந்தேகங்களை எதிரியிடம் கேட்டு தெரிந்து கொண்டுள்ளார். பிராஜக்ட் வேலைகளை எதிரியின் உதவியுடன் மேற்கொண்டுள்ளார். 2011 ம் ஆண்டு அசா.1-ன் வயது 20. அவர்

அப்போது பி.இ. இறுதி ஆண்டு படித்தார். அப்போது எதிரியின் வயது 29. இந்த பொருண்மைகளை அசா.1 தன் சாட்சியத்தில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். இந்த பின்னணியில் இவ்வழக்கில் அசா.1 அளித்துள்ள புகார் மற்றும் சாட்சியம் பற்றி தீர்வுகாணவேண்டியுள்ளது.

**சாட்சியங்கள் பரிசீலனை ( Analysis of Evidences):-**

24. 2011ம் ஆண்டு, முதல் கற்பழிப்பு சம்பவம் கோவை பாரஸ்ட் டிரான்சிட் லாட்ஜில் ஒரு அறையில் நடைபெற்றதாக அசா.1 தன் புகார் அசாஆ.1ல் கூறியுள்ளார். மேற்படி சம்பவம் நிகழ்ந்த தேதி, மாதம் புகாரில் அவர் குறிப்பிடவில்லை. நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திலும், நீதித்துறை நடுவரிடம் அளித்த வாக்குமூலம் அதசாஆ.2-விலும், அசா.1 2011ம் ஆண்டு எதிரி முதன் முதலில் தன்னை மிரட்டி உடலுறவு கொண்டு கற்பழித்ததாக கூறவில்லை. 2011ம் ஆண்டு சம்பவம் நிகழ்ந்ததாக அவர் கூறவில்லை. மாறாக 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நாள் சம்பவம் நிகழ்ந்ததாக சாட்சியத்திலும், அதசாஆ.2 வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார். அதற்கு பிறகு எதிரி பல தேதிகளில் அசா.1-ஐ அதே லாட்ஜிற்கு அழைத்துச் சென்று பலமுறை அசா.1-ஐ மிரட்டி உடலுறவு கொண்டதாக அசா.1 தெரிவித்துள்ளார்.

WEB COPY

25.இதனை நிரூபிக்க மேற்படி லாட்ஜ் உரிமையாளர் அசா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் மேற்படி லாட்ஜ் விருந்தினர் வருகை பதிவேடு புகைபட நகல்கள், அதசாஆ.3 முதல்அதசாஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த ஆவணங்களில் எதிரி ஒரு பெண்ணுடன் தங்கியதாக 15.09.2012 தேதியிட்ட வருகை பதிவேட்டில் குறிப்பிடவில்லை. மற்ற மூன்று வருகை பதிவேடு தாள்களில் Adults-2, ஒரு ஆண், ஒரு பெண் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அசா.4, எதிரியுடன் தங்கிய பெண் அசா.1 தான் என்று அடையாளம் காட்டவில்லை. எதிரி ஒரு பெண்ணுடன் ஓட்டல் அறையில் தங்கினார் என்று போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றும் எதிரியை நீதிமன்றத்தில் தான் முதலில் பார்த்தேன் என்றால் ஆமாம் என்றும் அசா.4 குறுக்குவிசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். எதிரி அல்லது அசா.1-ன் அடையாள அட்டை எதுவும் அவர்கள் விடுதியில் தங்கிய போது ஒப்படைத்ததாக அசா.4 சாட்சியமளிக்கவில்லை. அசா.1 அல்லது எதிரியின் அடையாள அட்டை மற்றும் அவர்கள் அந்த விடுதிக்கு வருகைபுரிந்தார்கள் என்பதை காட்ட CCTV பதிவுகள் எதுவும் அசா.4 தாக்கல் செய்யவில்லை. போலீசாரும் அதனை கைப்பற்றவில்லை.அசா.4 தாக்கல்

செய்துள்ள ஆவணங்கள் நான்கு 01.06.2012, 14.04.2012, 15.09.2012 மற்றும் 27.07.2013 தேதியிட்டவையாகும். 2011 ம் வருடம் எதிரியும், அசா.1 ம் அந்த விடுதியில் தங்கியதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, லாட்ஜ் அறை வாடகை செலுத்தியதற்கான ரசீதுகள் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே அசா.4 ன் சாட்சியமும் மேற்படி ஆவணங்களும் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவிலலை என்பது தெளிவாகின்றது.

26. அசா.1 தன்னை எதிரி மிட்டாய் மற்றும் மாத்திரை கொடுத்து மயக்கமடையச் செய்து தவறான கோணங்களில் செல்போனில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அவற்றை காட்டி மிரட்டி உடலுறவு கொண்டதாக தெரிவித்துள்ளார். செல்போனில் எடுத்த படங்களை எதிரி லேப்டாப்பில் பதிவிறக்கம் செய்து வைத்துள்ளார் என்றும் அவர் சொல்லும்படி கேட்காவிட்டால் அந்த படங்களையும், வீடியோக்களையும் இன்டர்நெட்டில் வெளியிட்டுவிடுவதாக எதிரி மிரட்டினார் என்றும் அசா.1 தெரிவித்துள்ளார். அந்த லேப்டாப் அசா.1 போலீசாரிடம் ஒப்படைத்ததின் பேரில் கைப்பற்றப்பட்டு சா.பொ.1 ஆக குறியிடப்பட்டு தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு அதனை ஆய்வு செய்த அசா.10 தடய அறிவியல் துறை உதவி இயக்குனர் அதசாஆ.15 அறிக்கை மற்றும் அதசாஆ.16 C.D. தாக்கல் செய்துள்ளார். அதசாஆ.15 அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 5, மேற்படி லேப்டாப்பிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களின் புகைப்பட நகல்கள் ஆகும். அந்த புகைப்படங்களில் அசா.1 தனியாகவும், எதிரியுடன் சேர்ந்தும் காணப்படுகிறார். அந்த புகைப்படங்களில் ஆபாசம் அல்லது அருவருப்பு ஏதும் இல்லை என்று அசா.10 குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த புகைப்படங்களை பார்வையிடும்போது அதில் அசா.1 ஆபாசமான, அருவருப்பான, தவறான கோணங்களில் புகைப்படம் எடுக்கப்பட்டதாக காணப்படவில்லை. எதிரியின் செல்போன் கைப்பற்றப்படவில்லை. ஆகவே இதிலிருந்து எதிரி அசா.1-ஐ தவறான கோணங்களில் புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுத்ததாக கூறுவது நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

27. அசா.1 தன்னை எதிரி 15.09.2013 ம் தேதியன்று வீட்டிற்கு வெளியே வரச்சொல்லி அங்கிருந்த காரில் தன்னை கட்டாயப்படுத்தி அவர் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார் என்றும் அவர் வீட்டிற்கு போன பிறகு தன்னை கட்டாயப்படுத்தி, மிரட்டி அவரை காதலித்தது போல கடிதம் எழுத வைத்து தன் வீட்டிற்கு அந்த கடிதத்தை

WEB COPY

அனுப்பினார் என்றும் அப்போது தான் தன் வீட்டிற்கு இந்த விவரம் தெரியும் என்றும் 01.06.2012 ம் தேதியன்று பாரஸ்ட் டிரான்சிட் லாட்ஜ்க்கு வரவழைத்து போட்டோக்களை கொடுக்காமல் கட்டாயப்படுத்தி குளிர்பானம் குடிக்க கொடுத்தார் என்றும் தனக்கு தலை சுற்றல் ஏற்பட்டது என்றும் 08.09.2013 ம் தேதியன்று சென்னையில் Registrar Office-க்கு கூட்டிச் சென்று தன்னிடம் அவர்கள் சந்தேகப்படும்படி நடந்து கொள்ளக்கூடாது என்றும் சிரித்துக்கொண்டே தான் இருக்க வேண்டும் என்று மிரட்டினார் என்றும் அதசாஆ.2 வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த விவரங்களை அசா.1 நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திலும், அதசாஆ.1 புகாரிலும் குறிப்பிடவில்லை.

28. மேலும் அசா.1 மருத்துவ பரிசோதனையின் போது அசா.8 மருத்துவரிடம், கடைசியாக தெரிந்த ஆண் நபருடன் அவருடைய வீட்டில் வைத்து மூன்று மாதங்கள் முன்பு உடலுறவு கொண்டதாக தெரிவித்துள்ளார். இது அதசாஆ.12 விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த சம்பவம் பற்றி அசா.1 தன் புகாரிலும், சாட்சியத்திலும் தெரிவிக்கவில்லை.

WEB COPY

29. அசா.7 சார் பதிவாளர், எதிரியும், அசா.1-ம் திருமணம் செய்து கொண்டு அதனை பதிவு செய்துள்ளார்கள் என்றும் அவர்களின் திருமண பதிவு சம்மந்தமான பதிவேட்டின் நகல் அதசாஆ.11 என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி திருமணம் 09.10.2013 ம் தேதியன்று சென்னையில் நடைபெற்று பதிவு செய்யப்பட்டுள்ளது. விவாகரத்து கோரி அசா.1 ம், சேர்ந்து வாழ உத்தரவு கோரி எதிரியும், தனித்தனியாக மனுக்கள் ஊட்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்று அசா.1 ஒப்புக்கொண்டுள்ளார். இந்த புகாருக்கு முன்பே எதிரி நீதிமன்றத்தில் மேற்படிமனு தாக்கல் செய்துள்ளார். திருமணம் முடிந்தவுடன் மறு நாள் அசா.1-ஐ எதிரி கல்லூரியில் கொண்டு வந்து விட்டுள்ளார். அதன் பிறகு அசா.1 பலமுறை தன் பெற்றோருடன் போனில் பேசியுள்ளார். மேலும் பலமுறை அசா.1 ஊட்டியில் உள்ள தன் பெற்றோர் வீட்டிற்கு சென்று வந்துள்ளார். ஆனால் பெற்றோரிடம் அசா.1 இந்த திருமணம் பற்றி தெரிவிக்கவில்லை. 14.12.2013 ம் தேதியன்று அசா.1 கற்பழிப்பு சம்பவங்கள் மற்றும்திருமணம் பற்றி தன் பெற்றோரிடம் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அதனை அவர் பெற்றோரான அசா.2 மற்றும் அசா.3 ஒப்புக்கொண்டுள்ளார்கள்.அன்று கல்லூரிக்கு தங்களுடன் ஒரு வழக்கறிஞரும் வந்திருந்ததாக அசா.3 குறுக்குவிசாரணையில் தெரிவித்துள்ளார். நடந்த சம்பவங்கள் பற்றி அசா.1 தகவல் தெரிவித்தும், அவர் பெற்றோரான அசா.2 மற்றும் அசா-3 உடனே காவல் நிலையத்தில் புகார்

கொடுக்கவில்லை. மாறாக அசா.1-ஐ விடுதியிலிருந்து அழைத்து சென்றுவிட்டதாக அசா.2 மற்றும் அசா.3 தெரிவித்துள்ளார்கள். 19.12.2013 ம் தேதியன்று எதிரி செட்டிபாளையம் காவல் நிலையத்தில் தன் மனைவியான அசா.1-ஐ அவர் பெற்றோர் மறைத்து வைத்திருப்பதாக புகார் கொடுத்து அன்று காவல் நிலையத்தில் விசாரணை நடந்துள்ளது. அந்த விசாரணையின் போது கற்பழிப்பு சம்பவம் பற்றியும், ஆபாசமாக படங்கள் மற்றும் வீடியோ எடுத்தது பற்றியும் போலீசாரிடம் சொல்லவில்லை என்றும் இந்த புகார் கொடுக்கும் போது தான் அது பற்றி சொன்னேன் என்றும் அசா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். அதன் பிறகும் அசா.1 முதல் அசா.3 உடனடியாக எதிரிமீது புகார் கொடுக்கவில்லை. சுமார் ஒரு மாதம் கழித்து தான் 20.01.2014 ம் தேதியன்று இவ்வழக்கு புகார் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த காலதாமதத்திற்கான காரணம் சரியான முறையில் விளக்கப்படவில்லை.

WEB COPY

30. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு மூன்று நாட்கள் முன்பே கோவையில் காவல் துறை உதவி ஆணையரை பார்த்து புகார் கொடுத்தோம் என்றும் உதவி ஆணையர் எதிரியை அழைத்து விசாரித்தார் என்றும் அசா.1 முதல் அசா.3 குறுக்கு விசாரணயில் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இதிலிருந்து முதல் புகார் மறைக்கப்பட்டுள்ளது என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்கதக்கதாக உள்ளது.

31.எதிரி மிரட்டி தன்னை திருமணம் செய்து கொண்டதாக அசா.1 தெரிவித்துள்ளார். திருமண சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எதசாஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த புகைப்படங்களை பார்வையிடும் போது அசா.1 மகிழ்ச்சியாகவும், இயல்பாகவும், இருப்பது தெளிவாகின்றது. 09.10.2013 ம் தேதியன்று திருமணம் சென்னையில் நடைபெற்றுள்ளது, இருவரும் தனியாக அரசு பேரூந்தில் கோவையிலிருந்து சென்னைக்கு சென்று திரும்பி வந்துள்ளார்கள். அசா.1 க்கு அன்றே திருமணம் பற்றி நன்றாக தெரியும். அதன் பிறகு அவரை எதிரி தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. வழக்கம் போல அசா.1 கல்லூரிக்கும், பெற்றோர் வீட்டிற்கும் சென்று வந்துள்ளார். ஆனால் மேற்படிதிருமணத்தை பற்றி யாரிடமும் தெரிவிக்கவில்லை. அசா.1 அப்போது எம்.இ. என்ற பொறியியல் பட்டமேற்படிப்பு படித்தார். அனைத்து விவரங்களும், அதன் விளைவுகளும் அசா.1 க்கு நன்றாக தெரியும்.இருந்தபோதிலும் அவர் எந்த புகாரும், ஆடசேபனையும், எதிரிமீது நடவடிக்கையும் எடுக்காமல்

இருந்துள்ளது அசா.1ன் சாட்சியத்தின் நம்பகத்தன்மையை சந்தேகிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. அசா.1 தன் கைப்பட தன் பெற்றோருக்கு எழுதியுள்ள எதசாஆ.3 கடிதமும், அசா.-1-ன் விருப்பத்தின் பேரில் திருமணம் நடைபெற்றதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இந்த சூழ்நிலையில் அசா.1ன் முழு சம்மதம் மற்றும்விருப்பத்தின் பேரில் தான் தங்கள் திருமணம் நடந்ததாக எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம் வலுவானதாகவே அமைந்துள்ளது.

32. எதிரி தொந்தரவு கொடுத்ததால் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்ததாகவும், விடுதியில் உள்ள மற்ற பெண்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்று தன்னை காப்பாற்றியதாகவும், அசா.1 சாட்சியமளித்துள்ளார். ஆனால் இது சம்மந்தமாக சாட்சிகள் ஒருவரும் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தற்கொலை முயற்சி செய்த தேதிகள், சிகிச்சையளிக்கப்பட்ட மருத்துவமனை பற்றி விவரம் எதுவும் அசா.1 தெரிவிக்கவில்லை. ஆகவே இது குறித்த அசா.1ன் சாட்சியம் நம்பும்படியாக அமையவில்லை.

WEB COPY

**<u>மருத்துவ சாட்சியம்:-</u>**

33. அசா.1-ஐ மருத்துவ பரிசோதனை செய்த அசா.8, மருத்துவர், அசா.1ன் உடலில் உள்காயங்களோ, வெளிக்காயங்களோ எதுவும் காணப்படவில்லை என்றும் சிறுநீர் பரிசோதனை செய்ததில் அசா.1 கர்ப்பமாக இல்லை என்று தெரிய வந்தது என்றும் இரசாயன பரிசோதனையில் அசா.1ன் பிறப்பு உறுப்பு திரவத்தில் ஆண் விந்து அணுக்கள் காணப்படவில்லை என்று அறிக்கை கிடைக்கப்பெற்றது என்றும் அசா.1ன் கன்னித்திரை கிழிந்திருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் பெண்கள் அதிகமாக சைக்கிள் ஓட்டுவதாலும், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடுவதாலும் கன்னித்திரை கிழிவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான் என்று அசா.8 ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே மருத்துவர் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

**<u>தடய அறிவியல் சாட்சியம்:</u>**

34. அசா.9 கோவை வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர், அசா.1ன் பிறப்பு உறுப்பு திரவம் தேய்க்கப்பட்ட கண்ணாடி வில்லைகளை ஆய்வு செய்து அவற்றில் விந்து அணுக்கள் காணப்படவில்லை என்று அறிக்கை தயாரித்தது பற்றி சாட்சியமளித்துள்ளார். முன்பே கூறியபடி அசா.10 சென்னை தடய அறிவியல் துறை அலுவலர் சா.பொ.1 லேப்டாப் ஆய்வு செய்தது பற்றி சாட்சியமளித்துள்ளார். மேற்படி

இருவரின் சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை.

35. அசா.13 புலன் விசாரணை அதிகாரியும் குறுக்குவிசாரணை சாட்சியத்தில் 2011 ம் ஆண்டு சம்மந்தமான லாட்ஜ் பதிவேடுகள் தாக்கல் செய்யவில்லை என்றும் எதிரியின் செல்போன் கைப்பற்றப்படவில்லை என்றும் சம்பவம் குறித்த தேதிகள் புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் கூறப்படவில்லை என்றும் புகார் கொடுப்பதற்கு முன்பு அசா.1 ம், எதிரியும் தன்னிடம் விசாரணைக்கு வந்தார்கள் என்றும் அசா.1 ன் தற்கொலை முயற்சிகள் பற்றி சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே புலன் விசாரணை முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது.

36. சம்பவ இடம் பாரஸ்ட் டிரான்சிட் லாட்ஜ் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி லாட்ஜ் கோவையின் முக்கியமான பகுதியில் அமைந்துள்ளது. அந்த லாட்ஜ் அருகில் மருத்துவமனை, திருமணமண்டபம் மேலும் பல கடைகள் அமைந்துள்ளன. அந்த பகுதி எப்போதும் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி. அதசாஆ.3 முதல் அதசாஆ.6 வரையுள்ள லாட்ஜ் ஆவணங்களை பார்வையிடும் போது குறிப்பிட்ட தேதிகளில் முதல் நாள் மதியத்திலிருந்து மறு நாள் மதியம் வரை Non A.C. அறைகளில் இருவர் தங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. உண்மையிலேயே எதிரி அசா.1-ஐ மிரட்டி கட்டாயப்படுத்தி படங்கள் எடுத்திருந்தாலும், உடலுறவு கொண்டிருந்தாலும் அசா.1 சத்தம் போட்டு மற்றவர்களை உதவிக்கு அழைத்திருக்க முடியும். தொடர்ந்து அதே லாட்ஜ்க்கு பலமுறை சென்று தங்கியதாக அசா.1 தெரிவித்துள்ளார். ஆனால் ஒரு முறை கூட அசா.1 யாரிடமும் அல்லது மேற்படி லாட்ஜ் நிர்வாகத்திடம் எதிரியை பற்றி புகார் தெரிவிக்கவில்லை. மாறாக நாள் முழுவதும் அந்த விடுதியில் அசா.1 தங்கியதாக கூறப்பட்டுள்ளதை பரிசீலிக்கும் போது அசா.1 ன் சாட்சியம் உண்மையானதாக இருக்க வாயப்பில்லை என்பதும் அவர் சாட்சியம் நம்பதகுந்ததல்ல என்பதும் தெளிவாகிறது.

WEB COPY

37. எதிரி நீதிமன்றத்தில் மனுவும், காவல் நிலையத்தில் புகாரும் கொடுத்த பிறகு, அசா.1 இந்த புகாரை அளித்துள்ளார். இந்த புகார், மதுரையில் அசா.1 ன் குடும்ப நண்பரான நிலக்கோட்டையை சேர்ந்த ஒரு வழக்கறிஞர் அசா.1-ஐ சந்தித்த பிறகு, காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பது அதசாஆ.2 வாக்குமூலத்திலிருந்து தெரிய

வருகின்றது. இந்த சூழ்நிலையில், எதிரியும், அசா.1-ம் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அசா.1ன் பெற்றோர் இந்த திருமணத்தை விரும்பாமல் இருவரையும் பிரிக்கும் எண்ணத்தில் அசா.1-ஐ தூண்டிவிட்டு, விவாகரத்து பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்ற, எதிரி தரப்பு வாதம் வலுவானதாகவும், ஏற்கதக்கதாகவும் அமைந்துள்ளது.

38. இந்த வழக்கில் நேரடி சாட்சிகள் யாரும் இல்லை. அசா.1ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அசா.1ன் சாட்சியத்தில் காணப்படும் மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் அவர் சாட்சியம் நம்பதகுந்ததல்ல என்பதை தெளிவுபடுத்துகின்றது. எதிரிதரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட முன்மொழி தீர்ப்புகளின் பொருண்மைகள் இந்த வழக்கிற்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன. புகார் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதமும், அசா.1ன் சாட்சியத்தில் காணப்படும் முரண்பாடுகளும், அரசு தரப்பு வழக்கை மிகவும் பாதிக்கக்கூடிய வகையில், அமைந்துள்ளது. ஆகவே அசா.1ன் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு, எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்க இயலாது.

WEB COPY

**<u>தீர்வு:-</u>**

39. ஆகவே மேற்கூறிய காரணங்களால், எதிரி மீதான பிரிவுகள் 376 மற்றும் 506(i) இதசவின் கீழான குற்றச்சாட்டுச்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து அவ்வாறே இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

40. முடிவாக எதிரி மீதான பிரிவுகள் 376 மற்றும் 506(i) இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் எந்தவொரு தகுநிலை ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை அவர் மீதான குற்றச்சாட்டுக்களிலிருந்து பிரிவு 235(1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

41. இவ்வழக்கில் பி.ஆர்.எண்.67/2015 -ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 லேப்டாப் மற்றும் சா.பொ.2 லேப்டாப் சார்ஜர் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின், அதன் உரிமையாளரான எதிரி டோனிசோபர்ஸ் இடம் ஒப்படைக்கவும் அல்லது மேல் முறையீடு இருப்பின் மேல்முறையீட்டில் ஏற்படும் முடிவிற்கேற்ப செயல்படவும் உத்திரவிடப்படுகிறது.

42. இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2017-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

-Sd.A.Manimozhi-

WEB COPY

அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்
கோயம்புத்தூர்.

<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்</u>

| | |
|---|---|
| அ.சா. 1 | நந்தினிபிரியா |
| அ.சா. 2 | பிரபாகர் |
| அ.சா. 3 | பிரபாவதி |
| அ.சா.4 | மேத்யூ |
| அ.சா.5 | பாலகுமார் |
| அ.சா.6 | மருத்துவர். ஜெயசிங் |
| அ.சா.7 | திரு.திருச்செல்வம், சார்பதிவாளர் |
| அ.சா.8 | மருத்துவர், சுமித்ரா |
| அ.சா.9 | திரு. கே.வெங்கடேஸ்வரன்,அறிவியல் அலுவலர் |
| அ.சா.10 | திருமதி தேவகி, உதவி இயக்குனர், தடய அறிவியல் துறை |
| அ.சா.11 | திருமதி.ராணி, உதவி ஆய்வாளர் |
| அ.சா.12 | திரு. ஆர்.சுப்பையா, நீதித்துறை நடுவர் |

| | |
|---|---|
| அ.சா.13 | திருமதி ராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர் |

எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் - இல்லை

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.த.சா.ஆ.1 | 20.01.2014 | புகார் |
| 2 | அ.த.சா.ஆ.2 | 12.02.2014 | பிரிவு 164 குவிமுச-வின் கீழான அசா.1 ன் வாக்குமூலம் |
| 3 | அ.த.சா.ஆ.3 | 01.06.2012 | ஓட்டல் விருந்தினர் வருகை பதிவு அட்டை நகல் |
| 4 | அ.த.சா.ஆ.4 | 27.07.2013 | ஓட்டல் விருந்தினர் வருகை பதிவு அட்டை நகல் |
| 5 | அ.த.சா.ஆ.5 | 15.09.2012 | ஓட்டல் விருந்தினர் வருகை பதிவு அட்டை நகல் |
| 6 | அ.த.சா.ஆ.6 | 14.04.2012 | ஓட்டல் விருந்தினர் வருகை பதிவு அட்டை நகல் |
| 7 | அ.த.சா.ஆ.7 | 20.01.2014 | கைப்பற்றுதல் மகசர் |
| 8 | அ.த.சா.ஆ.8 | 20.01.2014 | பார்வை மகசர் |
| 9 | அ.த.சா.ஆ.9 | 13.03.2014 | மருத்துவ பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் (எதிரி) |
| 10 | அ.த.சா.ஆ.10 | 14.03.2014 | மருத்துவ பரிசோதனை சான்றிதழ் ( எதிரி) |
| 11 | அ.த.சா.ஆ.11 | 26.03.2014 | எதிரி மற்றும் அசா.1-ன் திருமண பதிவு சான்று நகல் அடங்கிய கோப்பு |
| 12 | அ.த.சா.ஆ.12 | 23.01.2014 | விபத்து பதிவேட்டு நகல் மற்றும் மருத்துவ பரிசோதனை சான்று ( அசா.1) |
| 13 | அ.த.சா.ஆ.13 | 17.03.2014 | இரசாயன பரிசோதனை அறிக்கை |
| 14 | அ.த.சா.ஆ.14 | 11.04.2014 | தடய அறிவியல் ஆய்வு வேண்டுகோள் கடிதம் |
| 15 | அ.த.சா.ஆ.15 | 22.05.2015 | மடி கணினி - தடய அறிவியல் ஆய்வறிக்கை ( இணைப்புகள் 1 முதல் 5) |
| 16 | அ.த.சா.ஆ.16 | 22.05.2015 | தடய அறிவியல் ஆய்வு C.D. |
| 17 | அ.த.சா.ஆ.17 | 20.01.2014 | முதல் தகவல் அறிக்கை |
| 18 | அ.த.சா.ஆ.18 | 12.02.2014 | பிரிவு 164 குவிமுச வாக்குமூலம் அடங்கிய கோப்பு |
| 19 | அ.த.சா.ஆ.19 | 20.01.2014 | படிவம் 95 |
| 20 | அ.த.சா.ஆ.20 | 20.01.2014 | மாதிரிவரைபடம் |
| 21 | அ.த.சா.ஆ.21 | 23.01.2014 | மருத்துவ பரிசோதனை வேண்டுகோள் கடிதம் ( |

WEB COPY

| | | | |
|---|---|---|---|
| | | | அசா.1) |

அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருட்கள் -

சா.பொ.1 – Lenova Laptop

சா.பொ.2 – Laptop charger

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | 11.10.2008 | கல்லூரி விடுதி பார்வையாளர் அட்டை நகல் |
| எ.சா.ஆ.2 | -- | புகைப்படங்கள் - 4 |
| எ.சா.ஆ.3 | 16.10.2013 | கடிதம் புகைப்பட நகல் |

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுப்பொருள்கள் - இல்லை.

WEB COPY

-Sd.A.Manimozhi-
அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்
கோயம்புத்தூர்.

<u>குறிப்பு:</u>

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையிலிருந்து ஆஜரானார்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப் படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

WEB COPY

FAIR COPY OF JUDGEMENT
SC.274/2015
DATE:23.06.2017
MAHILA COURT,CBE

WEB COPY